## மெட்ரோ ரெயில் விரிவாக்கத்தால்

# பயணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு!

சென்னை பிப் 25,

சென்னை மெட்ரோ ரெயில் முதற்கட்ட விரிவாக்கத்தினால் பயணிகள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:

முதற்கட்ட விரிவாக்கத்திற்கு முன்பு மெட்ரோ ரெயிலின் பயணம் ஒருநாளைக்கு 55,000 ஆக இருந்தது. வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரை முதற்கட்ட விரிவாக்கம் திறக்கப்பட்ட பின்னர், சராசரியாக தினசரி பயணிகளின் எண்ணிக்கை 74,000 ஆக உயர்ந்தது. தற்போது அதிகபட்ச கட்டணம் ரூ 70 லிருந்து ரூ 50 ஆக கட்டணக்குறைப்பு, ஸ்மார்ட் கார்டுகள் அல்லது கியூஆர் கோடைப் பயன்படுத்தி டிக்கெட்டுகளை வாங்கியவர்களுக்கு 20 சதவிகிதம் கூடுதல் தள்ளுபடி. போன்ற அறிவிப்புகள் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. இதனால் நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 86,000 பயணிகள் மெட்ரோ ரெயிலைப் பயன்படுத்துகின்றனர். வரும் காலங்களில் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சத்தைத் தொடும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஒருநாளைக்கு அதிகபட்சமாக ஏறக்குறைய 7,000 பயணிகள் சென்னை சென்ட்ரலுக்கும், விமான நிலையம் மற்றும் திருமங்கலம் நிலையங்களில் 4,500 பயணிகளும், வண்ணாரப்பேட்டை மற்றும் விம்கோ நகர் நிலையங்களில் இருந்து ஒருநாளைக்கு கிட்டத்தட்ட 2,000 பேர் பயணிக்கின்றனர். இது எதிர்பார்த்ததை விட அதிகம். அலுவலகப் பணியாளர்களும் கல்லூரி மாணவர்களும் வடக்குப் பகுதிகளிலிருந்து நகரின் மத்திய பகுதிகளுக்கு அதிகமாக பயணிக்கின்றனர். கூடுதலாக, கோயம்பேடு ரெயில் நிலையத்தில் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 3,000 பேர் பயணிக்கின்றனர். இது கோயம்பேடு சந்தைக்கு பயணிக்கும் வர்த்தகர்களாக இருக்கலாம். பயணிகளின் சுயவிவரத்தை அறிய ஒரு விரிவான ஆய்வு செய்யப்பட உள்ளது. அதன் மூலம் ரெயில்களின் எண்ணிக்கை குறித்து திட்டம் வகுக்க ஏதுவாக இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.